கல்குடா கல்வி வலய வலநிலையப் பரீட்சைச் சபை

பயிற்சிப் பரீட்சை கு.பொ.த (உ/த) – 2018 ஆனி

தரம்: 13 (2018)	தவணை: 06	விவசாயத் தொழினுட்பவியல் - I	நேரம்: 2மணி
சுட்டெண்/பெயர்:-			புள்ளிகள்:

அறிவுறுத்தல்கள் :-

* எல்லா வினாக்களுக்கும் விடை தருக.

1 தொடக்கம் 50 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் (1), (2), (3), (4), (5) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிந்தெடுத்து விடைத்தாளில் (X) இடுவதன் மூலம் காட்டுக.

---

1. சாரீரப்பதனை (Relativ humidity) அளவிட பயன்படும் உபகரணம்.
   (1) ஈரஉலர்குமிழ்வெப்பமானி (2) வெப்பமானி (3) அளினோமானி
   (4) உயர்இழிவுவெப்பமானி (5) தாழ் வெப்பமானி

2. சூழலுக்குப் பாதிப்பை ஏற்படுத்தத்தக்க கைத்தொழில்களுக்கான அனுமதி, சூழற்றாக்கம் பற்றிய மதிப்பீட்டு அறிக்கை ஆகியவற்றைப் பெற்றுக் கொள்ள வேண்டிய நிறுவனம்,
   (1) மத்திய சுற்றாடல் அதிகார சபை (2) சுற்றாடல் அமைச்சு
   (3) வனப் பாதுகாப்புத் திணைக்களம் (4) வன சீவராசிகள் திணைக்களம்
   (5) உல்லாசப் பயணச் சபை

3.. இலங்கையின் தேசிய விவசாயக் கொள்கையில் பின்வரும் குறிக்கோள்கள் உள்ளடக்கப்பட்டுள்ளதாக ஒரு மாணவன் கூறுகின்றான்.

   A – உணவு மற்றும் போசாக்குப் பாதுகாப்பை உறுதிப்படுத்துதல்

   B – அத்தியாவசிய விவசாயப் பண்டங்களை இறக்குமதி செய்தல்

   C – விவசாயத்துறையில் ஈடுபட்டுள்ள மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தல்.

   மேற்படி கூற்றுக்களுள் சரியானது / சரியானவை,

   (1) A மாத்திரம் (2) C மாத்திரம் (3) A, B மாத்திரம்
   (4) A,C மாத்திரம் (5) B, C மாத்திரம்

4. ஒரு குறித்த பிரதேசத்துக்குக்கிடைக்கும் ஆண்டு மழை வீழ்ச்சி 3250 m m உம் அவ்விடத்தின் குத்துயரம் 600 m உம் ஆகும். அப்பிரதேசம் அடங்கும் விவசாயக் காலநிலை வலயம்,

   (1) தாழ் நாட்டு ஈரவலயம் (2) மத்திய நாட்டு ஈரவலயம்
   (3) மலைநாட்டு ஈரவலயம் (4) மலைநாட்டு இடை வலயம்
   (5) மத்திய நாட்டு இடை வலயம்

5. இலங்கையின் ஈரவலய பிரதேசத்தின் சராசரி ஆண்டு மழைவீழ்ச்சி,
   (1) 300 mm (2) 900 mm (3) 1750 mm இலும் குறைவு
   (4) 1750 mm - 2500 mm இற்கு இடைப்பட்டது (5) 2500 mm இலும் உயர்வானது

6. SALT என்பது,
   (1) மண்ணின் உவர்த்தன்மையைச் சோதிக்கும் முறை
   (2) ஒரு மண்காப்பு முறை

www.kcu.lk

(3) மண்ணின் பௌதிக இயல்புகளை அளக்கும் ஒரு தொழினுட்ப முறை
(4) சதுப்பு நிலப் பிரதேசம்
(5) விவசாய நிலங்களில் விளைதிறனை அளக்கும் ஒரு முறை

7. மண்ணின் காரத்தன்மையை நீக்குவதற்காகப் பயன்படுத்தப்படுவது எது
(1) கல்சியமைதரொட்சைட்டு (2) கல்சியங்காபனேற்று
(3) கல்சியம் சல்பேற்று (4) கல்சியம் ஒற்சலேற்று
(5) டொலமைற்று

8. ஒரு தீப்பாறை வகையை சேர்ந்தது,
(1) டொலமைற்று (2) சிலேற்று (3) மணற்கல்
(4) சானொக்கைற்று (5) சலவைக்கல்

9. கீழே சில மண்காப்பு முறைகள் தரப்பட்டுள்ளன.
A படிமுறைப்பாத்தி அமைத்தல்
B மண்ணை சமவுயரக்கோடுகளின் வழியே பண்படுத்தல்
C சுழற்சிப் பயிர்ச்செய்கை
D வேலி அமைத்தல்
மேற்படி முறைகளுள் பயிராக்கவியல் முறை / முறைகள்,
(1) A, B மாத்திரம் (2) A, C மாத்திரம் (3) A, D மாத்திரம்
(4) B, C மாத்திரம் (5) A, B, C மாத்திரம்

10. அமிலத்தன்மையுள்ள மண்ணில் நன்கு வளரத்தக்க பயிர்,
(1) போஞ்சி (2) நெல் (3) குரக்கன் (4) கரும்பு (5) தேயிலை

11. மண்தேய்வுக்கு உள்ளான மண்ணின் நைதரசன் அடக்கத்தை அதிகரித்துக் கொள்வதற்காக ஒரு விவசாயி, அவரையப் பயிர் பயிரிடத் தீர்மானித்துள்ளார். மண்ணின் நைதரசன் அடக்கத்தை அதிகரித்துக் கொள்வதற்காக அவர் கையாளத்தக்க மிகப்பொருத்தமான ஒரு நடவடிக்கை,
(1) அவரைப் பயிரைப் பயிரிட முன்னர் மண்ணுடன் சுண்ணாம்பு சேர்த்தல்
(2) அவரைப் பயிரைப் பயிரிட முன்னர் மண்காப்பு முறைகளைக் கையாளல்
(3) அவரைப் பயிர் வித்துக்களைக் கிருமி புகுத்திய (innoculate) பின்னர் நடுதல்
(4) முன்னைய தடவை நட்ட வித்துக்களின் இருமடங்கு வித்துக்கள் நடுதல்
(5) அவரை வித்துக்களை நட்ட பின்னர் மண்ணுக்கு மூடுபடையிடலும் மண்ணைச் களக் கொள்ளளவு நிலையில் பேணுதலும்

12. மண்ணின் உண்மை அடர்த்தி வேறுபடுவதில் செல்வாக்குச் செலுத்தத்தக்க ஓர் காரணி,
(1) மண் மாதிரியைப் பெற்ற விதம் (2) மண்ணில் உள்ள துளைகளின் விகிதம்
(3) மண்ணின் நீர்ச் சதவீதம் (4) மண்ணின் மணல் சதவீதம்
(5) மண் மாதிரியை அரைக்கும் செயன்முறை

13. ஒரு மாணவன் மண் மாதிரியொன்றிலிருந்து ஏறத்தாழ 60 g மண்ணை எடுத்து, ஈரமாக்கி, உருட்டி ஒரு மோதிரம் போன்ற அமைப்பை ஆக்கினான், அவன் சோதித்துப் பார்த்த மண்ணின் இயல்பு எது,
(1) அமைப்பு (2) இழையமைப்பு (3) நிறம்
(4) அடர்த்தி (5) எதிர்ப்புத்தன்மை

14. கூட்டெரு உற்பத்தியின் போது ஆரம்பக் கலவையுடன் ஏற்கனவே தயாரிக்கப்பட்ட சிறிதளவு கூட்டெரு சேர்க்கப்பட்டது. அதன் மூலம் எதிர்பார்க்கப்படுவது,
(1) கலவையில் அடங்கியுள்ள நோயாக்கிகளை அழித்தல்
(2) கூட்டெருவின் போசணைக் கட்டமைப்பை மேம்படுத்தல்
(3) காற்றின்றிய நுண்ணுயிர்களின் தொழிற்பாட்டைக் குறைத்தல்
(4) கூட்டெரு உற்பத்திக்குச் செலவாகும் காலத்தைக் குறைத்தல்
(5) கூட்டெருவின் C:N விகிதத்தை அதிகரித்தல்

www.tgedu.lk

15. போசணைக் குறைபாடு காரணமாகச் சில தாவரங்களில் காணப்படும் அறிகுறிகள் கீழே தரப்பட்டுள்ளன.

- தாவர இளம் இலைகள் மஞ்சள் நிறமாகக் காணப்படுதல்
- இலை நரம்புகள் கரும்பச்சை நிற வலை போன்று காட்சியளித்தல் (நரம்புகளுக்கு இடையே நிறப்பசை இன்மை)

இத்தாவரங்களில் குறைபாடாகவுள்ள தாவர போசணை எது,

(1) நைதரசன் (2) பொசுபரசு (3) பொற்றாசியம் (4) குளோரீன் (5) இரும்பு

16. பின்வரும் சேதனப் பசளைகளுள் அதிக சதவீதம் நைதரசன் அடங்கியுள்ள பசளை,

(1) பண்ணைப் பசளை (2) ஆட்டெரு (3) மாடடெரு (4) பன்றி எரு (5) கோழி எரு

17. 100 kg யூரியாப் பசளையில் அடங்கியுள்ள நைதரசன் கிலோகிராம்,

(1) 12kg (2) 23kg (3) 46kg (4) 30kg (5) 100kg

18. சிறந்த கூட்டெரு மாதிரியொன்றின் இயல்புகள்,

(1) கருமை நிறமானது, இலேசானது (2) மஞ்சள் நிறமானது, பாரமானது
(3) கபிலநிறமானது, பாரமானது (4) மஞ்சள் நிறமானது, இலேசானது
(5) கறுப்பு நிறமானது, பாரமானது

19. பின்வரும் தாவரங்களுள் பசுத்தாட் பசளைக்கு மிகப் பொருத்தமானவை,

(1) கினி புல், பியூரேரியா (2) நேப்பியர், செற்றேரியா
(3) கௌத்தமாலா, அசொல்லா (4) காட்டுச் சூரிய காந்தி, கிளிசிறியா
(5) கப்பெட்டியா, கினிபுல்

20. விவசாய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் பிரதேசங்களில் அதிகமதிகமாக இரசாயனப் பொருள்கள் பயன்படுத்தப்படுவதால், அவை நீருடன் சேர்வதால் நீர் மாசைடயும். அவ்வாறு நீர் மாசடைதலானது நீலக்குழந்தை (Blue baby syndrome) ஏற்படக் காரணமாகின்றமை அறியப்பட்டுள்ளது. அந்நிலைமையை ஏற்படுத்துவதில் பங்களிக்கும் ஒரு இரசாயனப் பொருள்,

(1) யூரியா (2) டொலமைட்டு (3) ஜிப்சம் (4) கிளைபோசேற்று
(5) காபோபியுரான்

21. காய்கறிப் பயிரொன்றுக்காகப் பசளைக் கலவையொன்று தயாரிப்பதற்காகப் பயன்படுத்தத்தக்க மூன்று பசளைவகைகளைக் கொண்ட தொகுதி,

(1) யூரியா, அமோனியம் சல்பேற்று, மியுரியேற்றுப் பொற்றாசு
(2) யூரியா, மும்மை சுப்பர் பொசுபேற்று, மியூரியேற்றுப் பொற்றாசு
(3) அமோனியம் சல்பேற்று, எப்பாவலை அப்பத்தைற்று, சோடியம் நைத்திரேற்று
(4) அமோனியம் சல்பேற்று, மியுரிபேற்றுப் பொற்றாசு, டொலமைட்டு
(5) யூரியா பாறைப்பொசுபேற்று, அமோனியம் சல்பேற்று

22. மண்ணைப் பண்படுத்துவதனால் மண்ணின்,

(1) நுண்டுளைத்தன்மை, உண்மையடர்த்தி என்பன அதிகரிக்கும்.
(2) நுண்ணுயிர்களது தொழிற்பாடும் நுண்டுளைத்தன்மையும் அதிகரிக்கும்.
(3) இழையமைப்பு, தோற்ற அடர்த்தி என்பன அபிவிருத்தியடையும்.
(4) நிறம், தோற்ற அடர்த்தி என்பன அதிகரிக்கும்.
(5) கற்றயன் பரிமாற்றக் கொள்ளளவு, பெறுமானம் என்பன அதிகரிக்கும்.

23. ஆரம்பப் பண்படுத்தலின் சரியான படிமுறை ஒழுங்கு,

(1) மண்ணைப் புரட்டுதல் → கட்டிகளைத் தூர்வையாக்குதல்→ பாத்திகள் அமைத்தல் → மட்டப்படுத்தல்.
(2) கட்டிகளைத் தூர்வையாக்குதல் → பாத்திகளை அமைத்தல் → மட்டுப்படுத்தல் → மண் கிருமியழித்தல்.

www.kedu.lk

(3) மண்ணைப் புரட்டுதல் → பாத்தி அமைத்தல;→ மட்டப்படுத்தல;→ வடிகால்கள் அமைத்தல்.
(4) கட்டிகளைத் தூர்வையாக்குதல் → பாத்திகளை அமைத்தல் → பாத்திகளை கிருமியழித்தல் → வடிகால்கள் அமைத்தல்.
(5) மண்ணைப்புரட்டுதல் → கட்டிகளைத்தூர்வையாக்குதல் → மட்டப்படுத்தல் → பாத்தி அமைத்தல்

24. இடைப்பண்படுத்தல் என்பது,
(1) தரைபண்படுத்தப்பட்டு வித்து நடுவதற்கு முன்னர் அத்தரையில் இடம்பெறும் செயற்பாடுகளாகும்.
(2) பயிர் நாட்டப்பட்டு வளர்ச்சியடைவதற்கு முன்னர் அத்தரையில் இடம்பெறும் செயற்பாடுகளாகும்.
(3) பயிர்நாட்டப்பட்டு பூத்தலுக்கு முன்னர் அம்மண்ணில் இடம்பெறும் செயற்பாடுகளாகும்.
(4) பயிர்நாட்டப்பட்டு பூத்தலின் பின்னர் அம்மண்ணில் இடம்பெறும் செயற்பாடுகளாகும்
(5) பயிர்நாட்டப்பட்டு அறுவடை பெறும் வரை, அம்மண்ணில் இடம்பெறும் செயற்பாடுகளாகும்.

25. பின்வரும் உபகரணங்களுள் ஆரம்பப் பண்படுத்தலுக்கு ஏற்ற உபகரணம்,
(1) முட்கலப்பை (2) ரொடோவேட்டர் (3) களைகட்டும் பொறி (4) தகட்டுக் கலப்பை
(5) ஆணிப் பற்கலப்பை

26. நெல் நாற்று நடும் கருவியொன்றிற்கு நாற்றுக்களைப் பெறுவதற்குப் பயன்படும் நாற்றுமேடை வகை,
(1) நொரிடோகோ நாற்று மேடை (2) டபொக் நாற்று மேடை
(3) சாடி நாற்று மேடை (4) உயர்நாற்று மேடை
(5) தாழ் நாற்று மேடை

27. உயர் பாத்திகளுக்காக சிபார்சு செய்யப்பட்டுள்ள, அகலம், உயரம் என்பன முறையே,
(1) 120 cm, 15 cm ஆகும் (2) 90 cm, 30 cm ஆகும்.
(3) 90 cm, 15 cm ஆகும் (4) 120 cm, 20 cm ஆகும்.
(5) 60 cm, 20 cm ஆகும்.

28. பின்வரும் நாற்று மேடைத்தொற்று நீக்கல் முறைகளில் மிகவும் சூழல் நேயமான முறை,
(1) நாற்று மேடைகளை எரியூட்டல்.
(2) நாற்று மேடையில் பங்கசு நாசியிடல்
(3) அதிக சூரிய ஒளிபடச் செய்தல்.
(4) நாற்று மேடைக்குத் தூமமிடல்
(5) கொதிநீரிடல்

29. வீசிவிதைத்தல் முறையில் நாற்றுக்கள் தாபிக்கப்படும் பயிர்,
(1) மிளகாய் (2) தக்காளி (3) பயற்றை (4) வெண்டி (5) நெல்

30. மண்ணைப் பண்படுத்தப் பயன்படுத்தும் ட்ரக்டர் மூலம் மண்ணில் ஏற்படுத்தப்படும் அமுக்கத்தைக் குறைப்பதற்கு,
(1) இலேசான டயர்கள் பயன்படுத்தப்படல் வேண்டும்.
(2) ட்ரக்டரின் ஓடுவேகத்தை அதிகரித்தல் வேண்டும்.
(3) அதிக விட்டம் கொண்ட டயர்கள் பயன்படுத்தப்படல்.
(4) டயர் நிலத்தில் மீது தொடும் பரப்பை அதிகரித்தல் வேண்டும்.
(5) டயரினுள் வாயுவமுக்கத்தை அதிகரித்தல் வேண்டும்.

www.ked.lk

31. ஆழக்குறைவான கிணற்றிலிருந்து நீரை உயர்த்துவதற்கான உகந்த முறையானது
(1) துலாக்கிணறு முறையாகும் (2) வாரி (3) மையநீக்க விசைப்பம்பியாகும்
(4) மீள்பம்பி (5) அச்சுப் பிரவாக முறை பம்பி

32. மேற்பரப்புப்பாசனம் மிகவும் பொருத்தமாக அமையும் பயிர்,
(1) நெற்செய்கைக்காகும். (2) வெங்காய செய்கைக்காகும்.
(3) மிளகாய்ச் செய்கைக்காகும் (4) வாழைச் செய்கைக்காகும்.
(5) வெட்டுப் பூச்செய்கைக்காகும்.

33. பொதுவாக மையநீக்க விசைப்பம்பியில் உறிஞ்சல்நிரல்,
(1) 6m ஆகும். (2) 8m ஆகும். (3) 10m ஆகும். (4) 12m ஆகும். (5) 15m ஆகும்

நீரை உயர்த்தப் பயன்படும் சில முறைகள் கீழே தரப்பட்டுள்ளன.அவற்றைத் துணையாகக் கொண்டு 34 ஆம் 35 ஆம் வினாக்களுக்கு விடை தருக.
A - கப்பி D - துலாக் கிணறு
B - ஆடுதுடுப்பு E - நீர்ச்சில்லு
C - இடப்பெயர்ச்சி பம்பி

34. சிறிய குளங்கள், நீர்நிலைகள், நீரோடைகள் என்பவற்றிலிருந்து நீரை மேலுயர்த்துவதற்குப்பயன்படுத்தும் பராம்பரிய முறை,
(1) A (2) B (3) C (4) D (5) E

35. முதலாம் வகை நெம்பு முறையில் நீரை மேலுயர்த்தும் உபகரணம்,
(1) A (2) B (3) C (4) D (5) E

36. துளிப்பாசனத் தொகுதியொன்றின் பகுதிகள் பின்வருமாறு.
A - உறிஞ்சு குழாய் B - பக்கக் குழாய்த் தொகுதி
C - பிரதான குழாய்த் தொகுதி D– நீர்ப்பம்பி
E - நீர் வெளியாக்கி F - உப பிரதான குழாயித் தொகுதி
நீர் முதலிலிருந்து பயிர் நிலம் வரைக்கும் மேற்படி பகுதிகள் தொடர்புபடும் ஒழுங்கு முறையே,
(1) A,B,C,F, D,E (2) A,D,C,B,F, E (3) A,D,E,C,F, B
(4) D,A,C,F,B,E (5) D,A,E,B,C,F

37. பொலித்தீன் இல்லத்துள் வளர்க்கப்பட்டுள்ள பயிர்களுக்கு மிகவும் பொருத்தமான நீர்ப்பாசன முறை,
(1) நிலக்கீழ்ப்பாசன முறை
(2) தூவல் பாசன முறை
(3) நிரல்பாசன முறை
(4) வளைய வடிவ பாசன முறை
(5) வரம்புசால் பாசன முறை

38. விவசாயியொருவர் வீட்டுத்தோட்டத்தில் நடுவதற்கென தக்காளி நாற்றுக்களைப் பெறும் நோக்குடன் பழுத்த தக்காளிப் பழமொன்றைப் பெற்று சாம்பலுடன் சேர்த்துப் பிசைந்து நீரினால் கழுவினார். இதன் நோக்கம் வித்துக்களின்,
(1) பங்கசுக்களை அகற்றுவதாகும். (2) வித்துறையை உரோஞ்சுதலாகும்.
(3) முளைத்தலை விரைபடுத்தலாகும். (4) வித்துறையை அகற்றுதலாகும்.
(5) நிரோதிப்புப் பதார்த்தங்களை அகற்றுதலாகும்.

www.kedu.lk

39. வைரசு நோய்கள் அற்ற நடுகைப்பொருட்களைப் பெறுவதற்கு மிகப் பொருத்தமான இனப்பெருக்க முறை,
(1) இழைய வளர்ப்பாகும் (2) நுண்ணினப் பெருக்கமாகும்
(3) ஒட்டுதலாகும் (4) பதிவைத்தலாகும்
(5) இலிங்கமுறை இனப்பெருக்கமாகும்

40. வெற்றிகரமான நீர்வளர்ப்புப் பயிர்செய்கைக்குரிய ஊடகத்தின் சிறப்பான pH வீச்சு,
(1) 6.5 - 7.2 (2) 5.5 - 6.5 (3) 6.5 - 7.2 (4) 7.2 - 8.7 (5) 9.2 - 9.7

41. நோய் காவிப் பூச்சிகள் காரணமாக பயிர்களில் நோய்கள் ஏற்படக் காரணமாகும் நோயாக்கி வகை,
(1) பற்றீரியா (2) பங்கசு (3) நெமற்றோடு (4) வைரசு (5) புரற்றசோவா

42. அறுவடைக்குப் பிந்திய தொழினுட்பம் பயன்படுத்தப்படும் அடிப்படையான நோக்கம்,
(1) அறுவடைக்குப் பிந்திய இழப்பைக் குறைத்தல்
(2) சந்தையில் விலையைக் கட்டுப்படுத்தல்
(3) அறுவடையைப் பன்முகப்படுத்தல்
(4) பல்வேறு நுட்ப முறைகளைப் பயன்படுத்துதல்
(5) மேலதிக விளைபொருளைப் பயன்படுத்துதல்

43. இலை மரக்கறி வகைகளையும் பழவகைகளையும் அறுவடை செய்வதற்கு மிகப்பொருத்தமான வேளை,
(1) சூரியோதயத்துக்கு முன்னர் அதிகாலை வேளை
(2) சூரிய அஸ்தமனத்துக்குப் பின்னர் மாலை வேளை
(3) சூரியன் உச்சியில் இருக்கும் நண்பகல் வேளை
(4) பனி நீங்கிய பின்னர் முற்பகல் வேளை
(5) நண்பகலுக்கும் பிற்பகலுக்கும் இடைப்பட்ட வேளை

44. பாற்பசுவொன்றின் கறவைக் காலம் நாள்களில்,
(1) 130 (2) 175 (3) 205 (4) 305 (5) 385

45. பாலில் அடங்கியுள்ள பிரதானமான, காபோவைதரேற்றும் புரதமும் முறையே,
(1) புரற்றோசு, இலற்றோசு (2) இலற்றோசு, கேசீன் (3) கேசீன், இலற்றோசு
(4) இலற்றோசு, புரற்றோசு (5) சுக்குரோசு, லைசீன்

46. கொல்லுவதற்காக புரொய்லர் கோழிகளைக் கொண்டு செல்லுவது தொடர்பான சரியான கூற்று,
(1) ஒரு பெட்டியில் அதிக தொகைக் கோழிகளை இட்டுக் கொண்டு செல்வதால் போக்குவரத்துச் செலவைக் குறைத்துக் கொள்ளலாம்
(2) கோழிகளின் அழுத்தத்தைக் குறைப்பதற்காக அவற்றைக் கொண்டு செல்ல முன்னர் நுண்ணுயிர்கொல்லி வழங்குதல் வேண்டும்
(3) கொண்டு செல்ல ஒரு நாளுக்கு முன்னர், உணவு வழங்குவதை நிறுத்துவதால் போக்குவரத்தின் போது கோழிகளுக்கு ஏற்படும் இடர்பாடுகளைத் தவிர்க்கலாம்
(4) நன்கு ஒளி கிடைக்கும் பகற்காலத்தில் கொண்டு செல்வதால் கோழிகள் ஒன்றையொன்று கொத்துவதைத் தவிர்க்கலாம்.
(5) கொண்டு சென்ற பின்னர், கோழிகளுக்கு பருகுவதற்கு நீர் வழங்குவதன் மூலம் அதிக களைப்பு காரணமாக நிகழத்தக்க இறப்புக்களின் அளவைக் குறைத்துக் கொள்ளலாம்.

www.ikedu.lk

47. நொதியஞ் சாராத கபிலநிறமாதல் தாக்கத்தின் விளைவு,
(1) வெட்டியவுடன் வாழைப் பொத்தி கருநிறமாதல்

(2) வெட்டிய ஆப்பிள் பழத்துண்டுகள் கபிலநிறமாதல்.

(3) பேரீச்சம், முந்திரிகை வற்றல் ஆகியன அவற்றின் குறித்த நிறத்தைப் பெறுதல்

(4) தேயிலை கறுப்பு நிறமாதல்

(5) விசுக்கோத்து பொற்கபில நிறமாதல்

48. காபோவைதரேற்றில் அடங்கியுள்ள மூலகங்கள்,
(1) காபன், ஒட்சிசன், ஐதரசன் (2) காபன், ஐதரசன், நைதரசன்

(3) காபன், நைதரசன், ஒட்சிசன் (4) காபன், ஐதரசன், சல்பர்

(5) காபன், நைதரசன், சல்பர்

49. ஒரு விவசாயி தமது பண்ணையில் விலங்கு வளர்ப்பு, பயிர் வளர்ப்பு ஆகியவற்றோடு விலங்குக் கழிவுப்பொருட்கள் பயிர் மீதிகள், கழிவுகளைக் கொண்டு உயிர் வாயுவும் உற்பத்தி செய்தார். இந்த விவசாய முறை,

(1) சுழற்சிப் பயிர்ச்செய்கை (2) கலப்புப் பயிர்ச்செய்கை

(3) காப்பு விவசாயமுறை (4) உலர் விவசாய முறை

(5) ஒன்றிணைந்த விவசாய முறை

50. பீடை நாசினி ஒன்றின் சுட்டுத் துண்டில் 'EC' என்பது
(1) Electrical Conductivity (2) Emulsifiable Concentrate

(3) Effective Concentration (4) European Community

(5) Enquiry Clause

www.lkedu.lk